## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான உச்ச வரம்பு – கிராமப்புறங்களில் ரூ.40,000/– மற்றும் நகர்புறங்களில் ரூ.60,000/– என்ற உச்சவரம்பை ரூ.72,000/– ஆக உயர்த்தி நிருவாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந2) துறை

அரசாணை (நிலை) எண். 02 நாள் 02.01.2018

திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி–மார்கழி 18

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.76, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 09.09.2010.
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதம் எண்.அ3/3593/2017, நாள் 20.07.2017.

--------

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.07.2017 அன்று பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு ஒவ்வொரு ஆண்டும் விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அதிக பயனாளிகள் பயனடையும் வகையில் தற்போது உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000/– ஆக உயர்த்தப்படும் என அறிவித்தார்கள்.

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரிடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துருவில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு விலையில்லா வீட்டுமனை, தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குதல் ஆகிய பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் கீழ் அதிக பயனாளிகள் பயனடையும் வகையில், தற்போதுள்ள ஆண்டு வருமான உச்ச வரம்பான கிராமப்புறங்களில் ரூ.40,000/– மற்றும் நகர்புறங்களில் ரூ.60,000/– என்பதை கிராமப்புற மற்றும் நகர்புற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.72,000/– ஆக உயர்த்திட ஆணைகள் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பை உயர்த்துவதால் ரூ.140 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும் எனவும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் ஆகியவற்றை பெறுவதற்கான பயனாளிகளின் தற்போதுள்ள ஆண்டு வருமான உச்ச வரம்பு கிராமப்புறங்களில் ரூ.40,000/– மற்றும் நகர்புறங்களில் ரூ.60,000/– என்பதை கிராமப்புற மற்றும் நகர்புற பயனாளிகளுக்கு ரூ.72,000/– (ரூபாய் எழுபத்து இரண்டாயிரம்) ஆக உயர்த்தி நிருவாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டங்களுக்கு கிராமப்புற மற்றும் நகர்புற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு தற்போது ரூ.72,000/– (ரூபாய் எழுபத்து இரண்டாயிரம்) ஆக உயர்த்தப்படும் என்ற விதியினைத் தவிர இத்திட்டங்களுக்கான மற்ற விதிமுறைகளில் ஏதும் மாற்றமின்றி தொடர்ந்து பின்பற்றபட வேண்டும் எனவும், மேலும், இத்திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஏதேனும் தேவைப்படின், இத்திட்டங்களுக்கான பயனாளிகளின் எண்ணிக்கை இறுதி செய்யப்பட்ட பின்னர், தேவைப்படும் நிதியினை 2017–18–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் பெறப்பட வேண்டும் எனவும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.60184/நிதி (பி,மிபி (ம) சிந)/2017, நாள் 28.11.2017–இன்படி பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை–5.
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை–II), சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (பி,மிபி (ம) சிந)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கி. [signature] 2/1/18
பிரிவு அலுவலர்